**செ. கு. எண்: 124** **நாள்: 26.07.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 26.7.2018</u>

திருவண்ணமலை மாவட்டம், கலசபாக்கம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. G.கிருஷ்ணமூர்த்தி;

சந்தவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. R. கணபதி;

சாத்தனூர் அணை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. P.சந்திரன்;

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. கா. மதிவாணன்;

கரூர் மாவட்டம், வேலாயுதம்பாளையம் காவல் நிலையத்தில், தலைமைக் காவலர் திரு. S.சிவசுப்பிரமணியன்;

விருதுநகர் மாவட்டம், வத்தராயிருப்பு காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. M.காளிமுத்து;

திருச்சிராப்பள்ளி மாநகர காவல், கோட்டை போக்குவரத்து பிரிவு, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. S.சீராளன்;

சிவகங்கை மாவட்டம், கீழச்சீவல்பட்டி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. R.அண்ணாதுரை;

சென்னை பெருநகர காவல், பட்டினப்பாக்கம் காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. ரமேஷ்பாபு;

வேலூர் மாவட்டம், ஆற்காடு டவுன் காவல் நிலையத்தில், பெண் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திருமதி அருள்மொழி;

நாகப்பட்டினம் மாவட்டம், வேட்டைக்காரனிருப்பு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. A. ராமகிருஷ்ணன்;

——— ஆகியோர் உடல்நலக் குறைவால் காலமானார்கள் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், சிறுவலூர் காவல் நிலையத்தில், தலைமை காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. C.மகேந்திரன்;

தூத்துக்குடி மாவட்டம், குற்றப் பிரிவு, குற்றப்புலனாய்வு துறையில் அவில்தாராகப் பணிபுரிந்து வந்த திரு. முருகேஷ் ஸ்ரீகாந்த் ;

தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில், உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. E.பால்ஐசக்;

திருவண்ணாமலை மாவட்டம், சந்தவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. தசரா;

———ஆகியோர் சாலை விபத்தில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

உடல் நலக்குறைவு மற்றும் சாலை விபத்துக்களில் உயிரிழந்த 15 காவலர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட 15 காவலர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**